# உலக மக்கள் தொகை தினம் - 2018

## வேலூர் மாவட்டம்

## உறுதி மொழி

நமது தாய்நாட்டின் மொத்த மேம்பாட்டிற்கும், தாய்மார்களின் நல்வாழ்விற்கும், குழந்தைகளின் ஒளிமயமான எதிர்காலத்திற்கும் மக்கள் தொகையினைக் கட்டுப்படுத்துதல் முதன்மையானதும், முக்கியமானதும் ஆகும் என்பதை நான் அறிந்துள்ளேன்.

சிறு குடும்பநெறி, திருமணத்திற்கேற்ற வயது, முதல் குழந்தையை தாமதபடுத்த மேற்கொள்ள வேண்டிய குடும்பநல முறைகள், முதல் குழந்தைக்கும்,இரண்டாவது குழந்தைக்கும் இடையே தேவையான இடைவெளி, ஒரு பெண் கருவுற்ற காலத்தில் வீட்டில் மேற்கொள்ள வேண்டிய சாதகமான சூழ்நிலையை உருவாக்குதல், பெண் கல்வியை மேன்மேலும் ஊக்குவித்தல்,

ஆணும்,பெண்ணும் சமம் என்பதற்கு செயல் வடிவம் கொடுத்தல். பெண் சிசுக்கொலையை தடுத்தல், மக்கள் தொகை பெருக்கத்தினால் ஏற்படும் தாக்கத்தை குறைத்தல் , சுற்றுப்புறச்சூழல் பாதிப்பை தடுத்தல் போன்ற குடும்பநல செய்திகளை அனைவருக்கும் எடுத்துக்கூறுவதில் என்னை நான் முழுமையாக ஈடுபடுத்திக்கொள்வேன் என உறுதி அளிக்கிறேன்.

குடும்பநலத்திட்டத்தை மக்கள் இயக்கமாக மலரச்செய்ய என்னை நான் முழுமையாக அர்ப்பணித்துக்கொள்வேன் எனவும் உறுதியளிக்கிறேன். என்னுடைய இந்த முயற்சிகள் வெற்றியடைய இயற்கை எனக்கு துணை நிற்கட்டும்.

" சிறுகுடும்பமே ஓர் அர்த்தமுள்ள
எதிர்கால ஆரம்பத்திற்கு உறுதுணை".